
www.padippakam.com


# சுமைகள்

சுமைகள்–12 பங்குனி, சித்திரை, வைகாசி 1995 Sumaihal Nr. 12, mars/april/mai 1995, Tromsø, Norge Løssalg kr. 10,-


# மீண்டும் யுத்தம்!! யாருக்கு லாபம்?





குறுகியகால யுத்த நிறுத்தத்தின் பின் மீண்டும் இலங்கையில் யுத்தம் தொடங்கியுள்ளது. புலிகள் யுத்தத்தை தொடங்கிவிட்டு குற்றத்தை அரசு மீது சுமத்த, பதிலிற்கு அரசு அனைத்து சக்திகளையும் ஒன்று திரட்டி புலிகளுக்கும் அவர்கள் போராட்டத்திற்கும் எதிரான பிரச்சாரத்தை சர்வதேச தளத்திலும், தாயகத்திலும் நடத்துகிறது. புலிகள் 23.4.95 அன்று யாழ்பாணத்தில் இருந்து வெளியிட்ட அறிக்கையில், புலிகள் தாம் யுத்தம் தொடங்கியதற்கு காரணமாக 1) பூநகரி முகாம் அகற்றுதலுடன், யாழ்பாண குடாநாட்டிற்கு போக்குவரத்தை சீர் செய்தல். 2) பொருளாதாரத் தடையை முற்று முழுதாக நீக்குதல், மற்றும் சில வேண்டுகோள்களை அரசு நிறைவேற்றத் தவறியதுடன், பேச்சு வார்த்தையை முன்னெடுப்பதற்கு அரசு பஞ்சிப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இக்காரணங்களின் அடிப்படையில் யுத்தத்தை தொடங்கியதாகவும் தொடர்ந்தும் அரசின் பித்தலாட்டத்தனத்திற்கு துணை போக முடியாதெனவும் மேற் குறிப்பிட்ட அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர். மேலும் 23.4.95 திகதியிடப்பட்ட மேற்படி அறிக்கையில், அரசின் குற்றச்சாட்டான, புலிகள் தான் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க தயாராக இல்லை என்ற பொய்ப் பிரச்சாரத்தையும் மறுத்துள்ளனர்.

இது ஒரு பக்கம் இருக்க, அரசு தரப்பில் பேச்சுவார்தைக் கதவு தொடர்ந்தும் திறந்திருப்பதாக அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. அரசைப் பொறுத்தளவில் சிறு அளவிலேனும் புலிகளின் வேண்டுகோளை நிறைவேற்றத் தயாராகவில்லை. இதன் அடிப்படை என்னவெனில், புலிகளை அரசு நம்பவில்லை என்பதேயாகும். புலிகளை அரசு நம்பாமல், வேண்கோள்களை நிறைவேற்றத் தவறுவதும், அதை நியாயப்படுத்த, பேச்சு வார்த்தைக்கு கதவு திறந்துள்ளது என அறிக்கை விடுவதும், அரசின் நயவஞ்சக இரட்டை வேடம் போடும் தனத்தையே காட்டுகிறது. சர்வதேச நாடுகளின் கண்களில் மண்ணைத்தூவி பண உதவி பெற்று, போர் நிறுத்தத்தை சாட்டாக வைத்து ஆயுதம் வாங்கி, யுத்தத்தில் ஈடுபடும் இலங்கை அரசின் இச் செயற்பாடு சமாதானம் ஏற்படும் என நம்பியிருந்த முழு இலங்கை மக்களின் முகத்திலும் கரிபூசியுள்ளது என்றால் மிகையாகாது.

புலிகளை அரசு நம்பாமல், வேண்கோள்களை நிறைவேற்றத் தவறுவதும், அதை நியாயப்படுத்த, பேச்சு வார்த்தைக்கு கதவு திறந்துள்ளது என அறிக்கை விடுவதும், அரசின் நயவஞ்சக இரட்டை வேடம் போடும் தனத்தையே காட்டுகிறது.



# தமிழ் கலாச்சாரமா! அது என்ன விலை?

## "ஒரு தமிழ் ஆணின் நோர்வே வாழ்வுக்கு விலை கொடுத்த தமிழ் பெண்ணின் கதை"

பேர்கனிலிருந்து ம. தேவகி

நோர்வேயில் பேர்கன் நகர பத்திரிகையான "பேர்கன் ரீடன்" கடந்த மாதம் தமிழ் வைத்தியர் ஒருவரை நாட்டை விட்டு வெளியேற்றியது பற்றி தொடர்ந்து செய்தி வெளியிட்டது. அச்செய்தியில் வைத்தியர் பற்றிய பல விடையங்களும், அவரின் வீரதீர செயற்பாடுகள் பற்றியும், அவர் நோர்வேயில் இருந்தால் நோர்வே நாட்டுக்கு எவ்வளவு நன்மை பயக்கும் எனவும் பக்கம் பக்கமாக செய்தி வெளியிட்டது. இதே பத்திரிகையில் திடீரென (25.2.95) நோர்வேயிய பெண் ஒருவர் சிறுகுழந்தையைக் கையில் ஏந்திய வண்ணம், தான் நாடுகடத்தப்பட்ட வைத்தியரின் காதலி எனவும், தன்கையில் ஏந்தியுள்ள பாலகி தனக்கும் வைத்தியருக்கும் பிறந்தது எனவும், தன் காதலனை தன்னிடம் சேர்க்கும்படியும் வேண்டுகோள் விடுத்தாள்.

மேலதிக செய்தி விபரம் 8ம் பக்கம்...

www.padippakam.com



## சுமைகள்

இரண்டு பத்திரிகைகள் மூலம் உங்கள் பலருடன் சந்தித்தமையையிட்டு மகிழ்சி அடைவதுடன் எமக்கு தற்போது ஆக்கங்களை அனுப்பி எம்மை தொடர்ந்தும் பத்திரிகையை வெளிக்கொண்டு வர உதவிவரும் வாசகர்களுக்கு நன்றியை தெரிவிப்பதுடன் எமது மூன்றாவது சுமைகளை உங்கள் கரங்களுக் அனுப்புகின்றோம்.

சென்ற பத்திரிகை வெளிவரும் போது இலங்கையில் சமாதானத்திற்கான சில அறிகுறிகள் தென்பட்டன. ஆனால் இன்றோ அங்கு என்ன நடைபெறுகின்றது என்பதை உங்களுக்கு நாம் கூறத் தேவையில்லை. இருந்த போதும் பல நாட்களாக நிலவிய யுத்தநிறுத்தம் மீறப்பட்டு மீண்டும் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கு அடிப்படைக் காரணம் என்னவெனில் இலங்கை அரசின் கெடாக்காண்டன் தன்மையே. புலிகளின் வேண்டுகோளான புனகரி முகாமை அகற்றுதல், பொருளாதாரத் தடையை நீக்குதல் போன்ற சிறு நிபந்தனைகளையே நிறைவேற்ற பின்நிற்கும் இவ்வரசு பல்லாண்டு பழமை வாய்ந்த தேசிய இனப்பிரச்சனையை எவ்வாறு தீர்த்து வைக்கப்போகிறது என்ற கேள்விக் குறியை எம் மத்தியில் ஏறபடுத்தி உள்ளது. புலிகள் போரை ஆரம்பித்த போதும் இம்முறை புலிகள் மீது குற்றம் கூறமுடியாது. எம்மைப் பொறுத்தவரை புலிகளின் இச்செயற்பாட்டை இராஜதந்திர நடவடிக்கையாகவே கருதுகிறோம். ஆகவே புலிகள் இவ்யுத்தத்தை தொடர்ந்து நடத்தாது அரசை பேர்ச்சு வார்தை மேடைக்கு மீண்டும் இழுத்து வர இவ்யுத்தத்தின் மூலம் முயற்சி செய்யவேண்டும்.
ஏற்கனவே பலமுறை யூஎன்பி அரசினால் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு இறுதியில் யுத்தத்தில் போய் முடிந்து, பல்லாயிரக்கணக்கானவர்கள் செத்து மடிந்தனர். இம்முறையும் அதே நிலைமைக்கு கொண்டு செல்லுமோ எனும் அச்சம் காணப்படுகின்றது. எனவே நாம் மக்கள் நின்மதியாய் வாழவேண்டும் என்ற அடிப்படையில் பிரைச்சனைக்கு இடைக்காலத் தீர்வு ஒன்று தேவை என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

சுமைகள் தாமதமாகியே உங்களிடம் வருகிறது. ஆசிரியர் குழுவானது, தனது முழு நேரத்தையும், சக்தியையும் தமிழர்களை நாடுகடத்தப்படுவதை நிறுத்துவதற்கு எதிரான செயற்பாடுகளில் செலவிட்டதனாலேயே, இத்தாமதம் ஏற்பட்டது. இவ்வகைத்தாமதங்கள் எதிருகாலத்திலும் ஏற்படலாம் என்பதை வாசகர்களாகிய உங்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

# உலகப்பெண்கள் தினம்

## பங்குனி 8ஆம் திகதி பெண்களின் போராட்ட தினமாக, ஒடுக்கு முறைக்கு எதிரான போர்பிரகடனம் செய்யும் நாளாக இருந்து வருகிறது.

பங்குனி 8 உலகப் பெண்கள் தினம். இதை ஒட்டி உலகம் பூராகவும் பெண்களின் உரிமை கோரி ஊர்வலங்கள் நடைபெற்றன. இதே போன்று நோர்வேயிலும் ஊர்வலம் நடைபெற்றது. இங்கு நடந்த ஊர்வலங்களில் முன்பை விட அதிகமானவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது. தம்மை இச் சமூகம் ஒடுக்குகின்றது என்ற விழிப்புனர்வு பெண்கள் மத்தியில் வளர்ந்து வருகின்றது என்பதற்கு ஊர்வலங்களுக்கு அனேகமானோர் பங்பற்றியது சாண்றாக அமைகிறது. நம் கீழத்தேச நாடுகளில் ஐரோப்பிய பெண்கள் முற்று முழுதாக விடுதலை இடைந்தவர்கள் என்றே நினைத்துக் கொண்டிருக்கின்றோம். உண்மை என்னவெனில் பெண்னெடுக்கு முறையானது எமது நாடுகளைப் போன்று இந்நாடுகளிலும் உக்கிரமாகவே இருந்து வருகிறது. ஆனால் மறைமுகமாக வீட்டின் நான்கு சுவர்களுக்குள் இரகசியமாக நடந்து வருகிறது. சிறுவர் மீதானதும், பெண்கள் மீதானதுமான பாலியற் பலாத்தகாரமும், உடல் உளவியல் ஒடுக்கு முறையும் நாளுக்கு நாள் கூடிக் கொண்டே வருகிறது. , எமது நாடுகளைப் போன்று இந்நாடுகளிலும் பெண்களின் உழைப்பிற்கு முறைந்த மதிப்பே வழங்கப்படுகிறது. மேலும் "வளர்ச்சி அடைந்த நாட்டுப் பெண்கள் இருவேலை செய்பவர்களாக இருந்து வருகிறார்கள். அதாவது வீட்டிலும் வெளியிலும் வேலை செய்கிறார்கள். ஒடுக்கு முறையானது எல்லா நாடுகளிலும் வித்தியாசம் வித்தியாசமான வடிவங்களில் இருப்பினும் ஒடுக்குமுறையின் உக்கிரமானது எல்லா நாடுகளிலும் ஒரே அளவிலேயே இருந்து வருகிறது.

பெண்கள் என்றால் இப்படித்தான் வாழவேண்டும் என இச்சமூகம் சில சட்டவிதிகளை உருவாக்கியுள்ளது. இவ்விதிகளுக்கமைய பெண்கள் சிறுவயதில் இருந்தே வளர்க்கப்பட்டு வருகின்றனர். இதனால் தாம் இச்சமூகத்தில் ஒடுக்கப்பட்டுள்ளோம் என்பதையே அறியாமல் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் தமது வாழ்நாளை சுதந்திரமாக கழிப்பதை மறந்து தமது குடும்பத்திற்காக வாழ்கின்றனர். இவர்களின் விருப்பு வெறுப்புக்களை தீர்மானிப்பவர் ஆண்களாகவே இருந்து வருகின்றனர். இதற்கு இவ் ஆண் ஆதிக்க சமுதாயம் உதவியாக இருந்து வருகின்றது.இதற்காக தனிப்பட்ட ஆண்களை குற்றம் கூறிவிட முடியாது. காரணம் இச்சமூகத்தின் கட்டுப்பாட்டுக்குள் அவர்களும் விதிவிலக்கல்லவே.
இவ்வாறான இச்சமூகம் மாற்றப்பட்டு ஒடுக்கப்பட்டவர்களின் கைகள் பலமாகவேண்டும் என நினைத்தவர்களால் 1910ம் ஆண்டு டென்மார்க்கின் தலைநகரான செப்பன்காவன் நடைபேற்ற மகா நாட்டில் பங்குனி 8 பெண்கள் தினமாக பிரகடனப்படுத்துப்பட்டது. இன்று தொடக்கம் இன்று வரை பங்குனி 8ஆம் திகதி பெண்களின் போராட்ட தினமாக, ஒடுக்கு முறைக்கு எதிரான போர்பிரகடனம் செய்யும் நாளாக இருந்து வருகிறது.



## பெண்ணே ..............!

மகேந்திரா

பெண்ணே! இலக்கை நோக்கி
ஆரம்பி உன் பயணத்தை!
நின்றுவிடாதே
அது நீண்ட தொலைவானாலும்.
தளர்ந்துவிடாதே உன்னை நோக்கி வரும் தடைகளை
கண்டு எத்தனை யுகங்களானாலும் படிப்படியாக தொடர்ந்து
முன்னேறு.
என்றொரு நாள் நீ அந்த இலக்கை அடைவாய்.

பெண்ணே! நீ இல்லையேல் இந்த உலகம் இல்லை!
நீயேன் பயப்படவேண்டும்!
உலகத்தை அறி
துணிவு தன்னால் வரும், எழுந்து உன் காலில் நில்
துணிந்து முன்னேறிச் செல்
யார் கூறினார் உன்னால் முடியாது என்று!
யார் கூறினார் நீ ஒரு அடிமை என்று!

பெண்ணே! இல்லை உன்னிடம் அதிகாரம், ஆனால்
யாரும் உனக்கு அதைத் தரப்போவதில்லை
ஓடுகின்ற ஆறு ஓடிக்கொண்டே இருக்கும்
உன் தாகம் தீர்க்க அது நிற்கப்போவதில்லை
நீ எடுத்து அருந்த வேண்டும் அதேபோல்
எடுத்துக்கொள் அதிகாரத்தை உன்கையில்
செவிமடு மற்றவர்கள் அபிப்பிராயத்தை, ஆனால்
செயற்படு உன் எண்ணப்படி

பெண்ணே! உன்னால் முடியாதது,
இல்லை இந்த உலகில் ஒன்றும!
கடலலைகள் ஒருபோதும் ஓய்வதில்லை – அதேபோல்
ஓயக்கூடாது உன் எழுற்சி என்றும்!

வங்கி கணக்கு இலக்கம்
8245 40 59545
Sparebanken Nor
தபால் கணக்கு இலக்கம்
0826 08 68293
சந்தா வருடம் 60 குரோணர்
வெளிநாடு 10 us $

**REDAKSJON:**
Sumaihal redaksjonskommite.
**PRODUKSJON OG DISTRIBUSJON:**
Sumaihal aktivistgruppe - Norge.
**Layout og produksjonsansvarlig:**
Henrik Ormåsen.
**Trykk:** Bladet Tromsø i et opplag på 2000.

**Kontoradresse:**
Bankgt.1, 9001 Tromsø
**Tlf:** 77 65 65 91
**Kontortid:**
Ons. 17.00-20.00
Fre. 13.00-17.00
**Postadresse:**
Boks 415, 9001 Tromsø

படிப்பகம்

www.padippakam.com



## டென்மார்க்கில் இருந்து சுமைகளுக்காக கென்னிங் பேர்டசன்

# ஐக்கிய நாடுகள் சபையின் வறுமை ஒழிப்பு மாநாடும் அதன் பம்மாத்தும்

**Fra fattigdomskonferansen i Danmark - av vår kammerat og gjesteskribent: Henning Pedersen**

**அழகான பேச்சுக்களும், வர்ணனைகளும், மற்றும் நடைமுறைக்கு ஒவ்வாத செயற்திட்டங்களுமே இம் மாநாட்டில் முன்வைக்கப்பட்டது.**

கிட்டத்தட்ட ஒரு வாரமாக உலகத்தலைவர்கள், சமூகம் மற்றும் பொருளாதார வறுமை சம்மந்தமாக டென்மார்க்கில் கூடி ஆய்வு செய்தனர். வறுமைப்பிரச்சனை உலக தலைவர்கள் மாநாட்டில் ஆய்வுக்கு எடுக்கப்பட்டது, உலக வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

இவ் உச்சி மாநாடு நடக்கும் பிரதேசத்தில் நுழைவதானால் பிரத்தியேக அடையாள அட்டை வேண்டும். அவ் அடையாள அட்டை இல்லையேல் உட்புக முடியாது. சுமைகளாலும் மற்றும் நோர்வேஜிய மாணவர் பத்திரிகையான றொய்டா (RØYNDA) வுக்காகவும் செய்தி சேகரிக்க அனுப்பப்பட்ட என்னிடம், எனது பாஸ்போட்டைத் தவிர வேறு எதுவும் இல்லை. நானும் வேறு இரு நோர்வேஜிய பத்திரிகை நண்பர்களும் வெளிப்புறப் பாதுகாப்புத் தடைகளைத் தாண்டி மண்டப வாசலுக்கு வந்து உட்புகமுயன்றோம். அடையாள அட்டை பாதுகாப்புப் படையினரால் கேட்கப்பட்டது. மிகுதி உங்களுக்குச் சொல்லத் தேவையில்லை வழைமைபோல் உடனடியாக கைது செய்யப்பட்டு மண்டபத்தில் இருந்து பொலிசாரால் (வாகனத்தில்) இரு கிலோமிற்றருக்கு அப்பால் அப்புறப் படுத்தப்பட்டோம். இந்த உச்சி மாநாடு சாதாரண மக்களுக்கு இல்லையாம். உலக நாடுகளின் பிரதிநிதியாகவோ அல்லது CNN, BBC நிருபராக இருந்தால் தான் உள்விடுவார்களாம். BBCயும் CNNனும் யாருக்கு வேண்டிய தொடர்பு சாதனம். சாதாரண மக்களில் எவ்வளவு தொகையினரை செய்றடைகின்றது சீஎன்என்னும், பிபிசியும். மக்களை ஏமாற்றக் கூட்டப்படும் இவ் மாநாடுகளில், உண்மையை தோலுரிப்பவர்களுக்கு இடம் இல்லை என மறுப்பது "நியாயம் தானே".

இம்மாநாட்டிற்கு பாதுகாப்புக்கு மட்டும் கிட்டத்தட்ட அரை பில்லியன் டென்மார்க் குரோனர்கள் செலவிடப்பட்டது. மீதமான மற்றைய செலவுகள் 1 பில்லியன் டென்மார்க் குரோணர்கள். இத்தொகையானது டென்மார்க்கின் மொத்தமான மூன்றாம் உலக நாடுகளுக்கான நிதி உதவியிலும் பார்க்க அரை பில்லியன் அதிகமானது. இம்மாநாட்டின் நோக்கமாக ஐக்கிய நாடுகள் சபையால் சொல்லப்பட்டு முன்வைக்கப்பட்டது யாதெனில் "உலகில் நிலவும் வறுமையை ஒழிக்கவும், சமூக பொருளாதார மற்றும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தவும் வளர்ச்சி அடைந்த மற்றும் மூன்றாம் உலக நாடுகள் ஒன்று கூடி திட்டவட்டமான வேலைத்திட்டத்தை உருவாக்கி நடைமுறைப்படுத்த மாநாட்டின் மூலம் வழிவகுத்தல்".


ஆனால் நடந்தது என்ன? அழகான பேச்சுக்களும், வர்ணனைகளும், மற்றும் நடைமுறைக்கு ஒவ்வாத செயற்திட்டங்களுமே இம்மாநாட்டில் முன்வைக்கப்பட்டது. இம்மாநாட்டில் டென்மார்க் மட்டும் ஓரளவு பிரயோசனமான நடைவடிக்கை ஒன்றை முன் மொழிந்தது. மூன்றாம் உலக நாடுகளின் முதலாம் உலக நாடுகளுக்கான கடன் தொகையை இல்லாதொழிப்பதுவே டென்மார்க்கின் முன் மொழிவாகும். இதன் அடிப்படையில் டென்மார்க்கும், ஆஸ்திரியாவும் தமது கடன் பாக்கியை மூன்றாம் உலக நாடுகள் தரத்தேவையில்லை என அறிவிப்பு விடுத்தன. இவ்வறிவிப்பானது அனைத்து பணக்கார நாட்டு பிரதிநிதிகளையும் சினமடையச் செய்தது என்றால் மிகையாகாது. உதாரணமாக நோர்வே பிரதமர் தொடர்பு சாதனங்களுக்கு அளித்த பேட்டியில் டென்மார்க் நடவடிக்கையை அப்பட்டமாக எதிர்த்ததுடன் தனது எதிர்ப்பை நியாயப்படுத்தவும் செய்தார். உலக சமாதானத்திற்காகவும், உலக முன்னேற்றத்திற்காகவும் பாடுபடுவதாகக் காட்டிக் கொள்ளும் சிறு நாடான நோர்வேயே தனது பாசிசப் போக்கை டென்மார்க்கின் நடவடிக்கைகு எதிராக வெளிப்படுத்திய தென்றால் மற்றைய, பெரிய நாடுகளின் தலைவர்கள் எவ்வாறு சினமடைந்திருப்பார்கள் என நான் விபரிக்கத் தேவையில்லை.

மற்றதோர் குறிப்பிடத்தக்க விடையம் என்ன வெனில் அமெரிக்கப் பிரதிநிதியாக பங்கு கொண்ட "கில்லறிக் கினின்டன்" அமெரிக்கா 100, மில்லியன் டொலர்களை உலகப்பெண்களின் கல்விக்காக செலவிடப்போவதாக அறிவித்தார். இந்த 100 மல்லியன் டொலரானது முழு அமெரிக்காவிலும் குண்டி துடைப்பதற்காக பேப்பர் வாங்க ஒரு நாளில் செலவிடப்படும் தொகையில் பத்தில் ஒரு விகிதமாகும். உலகமகா கஞ்சத்தன, பயங்கரவாத அமெரிக்கா அரசிடம் இதைவிட மேலதிகமாகவும் எதிர்பார்க்க முடியாது.

<u>கஸ்ரோவும் மக்கள் திரளும் :–</u>

வறுமை ஒழிப்பு மகாநாடு ஒருபுறம் நடக்க, ஐம்பதினாயிரத்திற்கும் அதிகமான மக்கள் டென்மார்க் தலைநகரில் நடுவில் அமைந்த மேடையைச் சுற்றி திரண்டிருந்தனர். உலகின் எண்திசையையும் சேர்ந்த மக்கள் கடும் குளிரும், கொட்டும்பனியும் இம்சைப்படுத்துவதும் பாராது திரண்டிருந்தனர். திடீரென கரகோசமும், வாழ்த்துக்களும் வானைப்பிழக்கின்றது. நரையடர்ந்த தாடியுடன் "கிழவர்" மேடைவருகிறார், கரகோச ஒலி தொடர்கிறது. கம்பீரமான இராணுவ உடையணிந்த கஸ்ரோ புரட்சி வணக்கத்தை கூடியிருந்த மக்களுக்க கையசைத்துத் தெரிவிக்கின்றார்.

பூரண அமைதி, "கிழவர்" உரையாற்றத் தொடங்குகிறார். கஸ்ரோவின் உரை மாநாட்டையும், அங்கு கூடியிருந்த உலக மகாதலைவர்களையும் விமர்சிப்பதுடன் தொடங்கியது. "மாநாட்டுத் தலைவர்களும், ஐக்கியநாடுகள்சபையும் வறுமைக்கு



காரணமான காரணிகளை ஆராயாமல் வறுமை ஒழிப்பைப் பற்றிய மாநாட்டைக்கூட்டி உள்ளனர். இம் மாநாட்டைக்கூட்டி என்ன சாதித்துவிடப் போகிறார்கள். வெறும் வார்த்தைச் சவடாலும், மாநாட்டுஅறிக்கையும் எதையும் சாதித்து விடப்போவதில்லை. வறுமை ஒழிப்போம் என ஐநாசபை இம் மாநாட்டைக் கூட்டியுள்ளது. எங்கிருந்து நிதி திரட்டி ஐநாசபை வறுமையை ஒழிக்கப் போகிறது. தனது சொந்தச் செலவிற்கே நிதியில்லாமல் திண்டாடும் ஐநாசபைக்கு யார் உதவப் போகிறார்கள். ஐநாசபை உறுப்பினர் சந்தா கட்டுவதற்கே பின்நிற்கும் அமெரிக்கா உதவப்போவதில்லை. ...... —— வறுமை ஒழிக்க வேண்டும் எனில் இன்று நிலவும் உலக முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு மாற்றப்படல் வேண்டும். உலகச் செல்வங்கள் நாடுகளுக்கிடையே ஒழுங்காகப் பங்கிடப்பட வேண்டும். உலகச் செல்லங்களை மேற்கு ஐரோப்பிய நாடுகளும், வட அமெரிக்காவும் தமக்குள் பங்கு போட்டுக் கொள்கின்றன. உலக வறுமைக்கும் யுத்தங்களுக்கும் முக்கிய காரணியாக அமையும் இந்நாடுகளின் தலைவர்கள் இம்மாநாட்டில் உலக வறுமையை ஒழிப்பதாக வாய்கிழிய கத்துகின்றனர். இது நடக்கக் கூடிய விடையமல்ல. .......... ...... கஸ்ரோவின் உரை தொடர்கிறது. உரையின் முடிவில் "நான் தொடர்ந்தும் இக்கூட்டத்தில் மாநாட்டுத் தலைவர்களை விமர்சித்தால் என்னை உள்விடமாட்டார்கள்" —— —— என நகைத்தார் கஸ்ரோ. கரகோசம் விண்ணைப் பிளக்க உரை முடிகின்றது.

கஸ்ரோவின் உரையானது திரண்டிருந்த மக்கள் அனைவரையும் உணர்வு ரீதியாக உற்சாகத்தையும் ஒடுக்குமுறைக்கு எதிரான எழுற்சி கொள்ளும் தன்மையையும் தட்டி எழுப்பியதென்றால் மிகையாகாது. கியூபா தன்னந்தனிநாடாக தனித்து நின்று ஏகாதிபத்திய அமெரிக்காவிற்கு எதிராக போரிடுகிறது. கியூபாவுடன் வர்த்தகத் தொடர்புகளையும், அரசியல் தொடர்புகளையும் கொண்டுள்ள நாடுகளுடன் தனது உறவை முறித்துக் கொள்வதாக அமெரிக்கா பயமுறுத்துகிறது. அமெரிக்காவின் இப் பொருளாதாரத் தடையானது கியூபா மக்களையும், மக்கள் அரசையும் பலவிதத்தில் பாதிக்கின்றது. லத்தீன் அமெரிக்க நாடுகளிலேயே வறுமை ஒழிக்கப்பட்ட நாடான கியூபா, உலகின் சுகாதார, கல்வி, கலைத்துறைகளில் சிறந்து விளங்கும் நாடாகும்.

அமெரிக்க, கியூபாமக்கள் சிறப்பாக சீவிப்பது பொறுக்காமல் தன் ஏகாதிபத்திய அதிகாரத்தை கொண்டு வறுமையும், விபச்சாரத்தையும், அரசியல் பிளவையும் கியூபாவில் ஏற்படுத்து முனைகிறது. அமெரிக்காவின் இவ் மிலேச்சத்தனமான அரசியலுக்கு துணைபோகும் அடிவருடிகளான ஐரோப்பிய நாடுகள் மூன்றாம் உலக நாடுகளின் வறுமையை ஒழிப்பார்கள் என நம்பினால் நம் வாயில் மண்.

படிப்பகம்

www.padippakam.com



# நோர்வே அரசும், த

## இந்த தமிழ் கைக்கூலிகளின் இ
## சேர்ந்த அனைவரு

இக்கட்டுரையில் நோர்வேயில் தமிழ் மொழிபெயர்ப்பாளர்களாகவும், அகதிகளை குடியமர்த்தும் அதிகாரிகள், மற்றும் உதவியாளர்களாகப் பணிபுரியும் தமிழர்களைப் பற்றி ஓர் அலசல் அலச முற்படுகின்றேன். இந்த கட்டுரை எழுதுவதற்கான அடிப்படையாக எனது சொந்த அனுபவமும் எனது நண்பர்களின் அனுபவமும் துணையாக உள்ளது.

இந்த தமிழ் கைக்கூலிகளின் இம்சை அநேகமாக அகதியாக் வந்து சேர்ந்த அனைவரும் அனுபவித்திருப்பார்கள் என்பதில் எனக்கு எவ்வித சந்தேகமும் இல்லை. அதனால் உங்களுடன் என் அனுபவத்தையும், கருத்தையும் பகிர்ந்து கொள்கிறேன். மேலும் நான் உங்களுடன் என் தனிப்பட்ட அனுபவத்தைப் பகிர்வது போல் நீங்களும் உங்கள் அனுபவத்தை சுமைகள் ஊடாக (புனைபெயரில்) என்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன். இதற்கு சுமைகள் ஆசிரியர் குழு தொடர்ந்தும் களம் அமைத்துத் தரும் என எதிர்பார்க்கின்றேன்.

நோர்வேயும் தமிழர்களும்

எல்லோருக்கும் தெரிந்த விடையம் நோர்வேக்கு தமிழர்கள் அறுவதுகளில் குடியேறத் தொடங்கினர் என. ஆனாலும் பெரும் தொகையான தமிழர்கள் இங்கு படையெடுக்கத் தொடங்கியது 1983 இன் பிற்பாடே. மாணவர்களாகவே பெருந் தொகையினர் இங்கு 1988 ஆம் ஆண்டுவரையும் புலம்பெயர்ந்தனர். அகதிகளாக வரத்தொடங்கிய காலம் 1986 ஆம் ஆண்டில் எனலாம்.

1985 ஆம் ஆண்டில் எனது நினைவின் அடிப்படையில் ஒரு சிலரே அகதிகளாக இங்கு வந்திருந்தனர். பெரும்பான்மையானோர் மாணவர்களே. இக்காலகட்டத்தில் மாணவராக இங்கு புலம் பெயர்ந்தோர், அகதியாக வந்தவர்களை நாயிலும் கீழாகவே நடத்தினர். 1986 ஆம் ஆண்டு நோர்வேயின் வடக்குப் பிரதேசத்தில் உள்ள ஒரு நகரில் இரு மாணவர்களுக்கும் ஒரு அகதியாக புலம் பெயர்ந்தவருக்கும் நடைபெற்ற விவாதத்தில் பொறுமையிழந்த மாணவர்கள் அகதியான தமிழரின் சாதியைச் சொல்லி தாக்குதலில் ஈடுபட்டதுமல்லாமல் "அகதி நாயே உங்களாலே எங்களுக்குத் தாண்டா மானக்கேடு" எனவும் திட்டினர். அதுமட்டமல்லாது பொலிசாருடன் தொடர்பு கொண்டு அகதித் தமிழர் ஜேர்மனியில் இருந்து களவாக நோர்வேக்குள் நுழைந்ததாகவும் இவர் உண்மையில் இலங்கையர் அல்ல இந்தியர் எனவும் பொய்த்தகவல் தெரிவித்தனர். அகதியாக வந்தவரை பொலீஸ் மறுவிசாரணை செய்தது. ஆனால் திருப்பி ஜேர்மனிக்கு அனுப்பவில்லை. இது ஒரு சம்பவம் மட்டுமே இதுபோன்ற பல நூறு சம்பவங்கள், மாணவர்களாக நோர்வேக்கு வந்த தமிழ் மேதாவிகளால் அகதியாக வந்தவர்கள் மீது நடாத்தப்பட்டது. 1987இல் தமிழ் சங்க விழாவொன்றில் அகதியாக வந்த 8 தமிழ் இளைஞ்ஞர்கள் பங்கு பற்றுவது தடுக்கப்பட்டது. கூறிய காரணம், அவர்கள் சட்டத்திற்கு முரணாக நோர்வேக்குள் நுழைந்ததனால் தமிழ் சங்கத்தில் உள்ள சட்டரீதியாக நாட்டுக்குள் நுழைந்தவர்களுக்கு "தேவையில்லாத பிரச்சனை" ஏற்படும் என்பதே.

இவ்வாறாக, சொல்லவெண்ணா இம்சைகளையும், உடலியல் (அடித்தல், ஆயுதத்தாக்குதல்), உளவியல் (சாதி, உடல் குறைபாடு, உலக அறிவு போன்றவற்றை அடிப்படையாக வைத்து நக்கலடித்தல், கேலிசெய்தல்) தாக்குதல்களை அகதியாக குடியேறியோர் மீது நிகழ்த்தினர், மாணவர் என்ற போர்வையில் இங்கு வந்தவர்கள். ஆனாலும் எல்லா மாணவர்களையும் மேற்கூறிய பட்டியலில் சேர்த்துவிட முடியாது தான். பாடசாலை, வேலை, மற்றும் சொந்த முயற்சிகளைக் கைவிட்டு அகதியாக புலம் பெயர்ந்தவர்களுக்கு உதவி செய்த மாணவர்களும் உண்டு. இதனால் பல துன்பங்களை அனுபவித்த மாணவர்களும் உண்டு (எதற்கும் விதிவிலக்கு உண்டு தானே?).

மாணவர்களாக வந்த பலர் 86இற்குப் பின் இரகசியமாக அகதி அந்தஸ்துக் கோரினர். இதனால் 1988இல் இருந்து இலங்கைத் தமிழர்கள், நோர்வேக்கு மாணவர்களாக வரும் நிலை, நோர்வே அரசால் தடுத்து நிறுத்தப்பட்டது. மேலும் இலங்கையில் இருந்தும் மற்றும் ஐரோப்பிய நாடுகளில் இருந்தும் பலர் அகதியாக இங்கு வந்தனர். 1987 ஆம் ஆண்டில் இருந்து 1994 ஆம் ஆண்டு வரை நோர்வேக்கு அகதியாக வந்தவர்களில் பெரும்பான்மையினர் தமிழர்கள் ஆவர். 1990 இல் நோர்வேக்குள் குடியேறியோரில் தமிழர்கள் 45 வீதம் மாகவும் 1991 இல் 38 வீதம், 1992 இல் 35 வீதம், 1993 இல் 30 வீதம், 1994 இல் 32 வீதமாகவும் உள்ளனர். இக்காலகட்டத்தில் பெருந் தொகையான தமிழர்களின் வருகையால் நோர்வே அரசின் வெளிநாட்டவர் திணைக்களகத்திற்கு புதிதாக மொழிபெயற்ப்பாளர்கள், அகதிகள் புனர்வாழ்வு திட்ட உதியாளர்கள், சமூக சேவையாளர்கள் போன்ற பதவிகளுக்கு இலங்கையைச் சேர்ந்த தமிழ் மொழி பேசுபவர்கள் தேவைப்பட்டனர்.

1988 ஆம் ஆண்டில் வெளிநாட்டவர் திணைக்களத்தால் ஒலசுண்டில் மொழி பெயர்ப்பாளர்களுக்கான பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. இதில் கலந்து கொண்டோர் அனைவரும் தமிழர்களாவர். பெண்களும், ஆண்களுமாக 40 பேர் இதில் கலந்து கொண்டனர். இந்தப் பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் மாணவர்களாக நோர்வேக்கு வந்தவர்களாவர். இப்பயிற்றப்பட்ட மொழி பெயர்ப்பாளர்கள் நோர்வேயில் தமிழ் அகதிகள் வந்திருந்த அனைத்து நகரங்களுக்கும் அனுப்பப்பட்டனர். மாணவர்களாக வதிவிட அனுமதியைக் கொண்டிருந்த இந்த மொழி பெயர்ப்பாளர்களுக்கு நோர்வே அரசால் விசேட வதிவிட அனுமதி வழங்கப்பட்டது. இவ் வதிவிட அனுமதியானது நோர்வெயில் 75 ஆம் ஆண்டிற்கு பிற்பாடு சாதாரணமான தொழிலில் ஈடுபடுவோர், நோர்வேக்குள் வேலை தேடி வருவோருக்கு வழங்கப்படுவதில்லை.

ஏதாவது ஒரு துறையில் வல்லுனர்களானவர்களுக்கே வழங்கப்பட்டு வருகிறது. மாநகர சபைக்கு குடி பெயர்ந்த மொழி பெயர்ப்பாளர்களால் அகதிகள் குடியமர்த்தல், புனர்வாழ்வு அளித்தல் போன்ற நடவடிக்கைகளுக்கு பொறுப்பான நோர்வேஜிய அதிகாரிகளின் வேலை சுலபமாகியது. மொழி பெயர்ப்பாளர்கள் மூலம் நேரடியாக அதிகாரிகள் அகதிகளுடன் பேச முடிந்தது, முற்றுமுழுதாக அகதிகளின் தேவை, உளவியல் பூர்வமான பிரச்சனைக்ளை அறிந்து கொள்ள முடிந்தது. மொழி பெயர்ப்பாளர்களின் இவ் உதவியானது அதிகாரிகளுக்கு மட்டுமல்லாது அகதிகளுக்கும் ஓர் வரப்பிரசாதமாகவே அமைந்தது என்றால் மிகையாகாது.

நோர்வே அரசும், அகதிகள் அரசியலும்:–

1989 இல் நோர்வே அரசு அகதிகள் அரசியல் நிலைப்பாட்டில் மாற்றங்கள் செய்தது. நாட்டுக்குள் வரும் அகதிகளில் தஞ்சம் கோருவோர் தொகை குறைக்கப்பட்டு, மனிதாபிமான அடிப்படையில் வதிவட அனுமதி வழங்கும் முறை ஏற்படுத்தப்பட்டது. மேலும் அகதிகள் பொறுப்பெடுக்கும் நகர சபைகள் கூடியளவு குறைந்த பணத்தை செலவிடுவதுடன் கூடுமான அளவு சுயமுயற்சியில் வாழ வழிவகுத்தல் மற்றும் இதற்காக அகதிகளின் சொந்த தேசத்தை சேர்ந்தவர்களை வேலைக்கு அமர்த்தல் எனவும் முடிவேடுக்கப்பட்டது. இதன் அடிப்படையில் இலங்கைத் தமிழர்கள் பலர் அகதிகள் புனர்வாழ்வு அதிகாரிகளாக பதவி உயர்த்தப்பட்டனர்.

தமிழ் புனர்வாழ்வு அதிகாரிகள், மொழிபெயர்ப்பாளர்களின் அட்டகாசம்:– "

நான் கட்டுரையின் முன்பகுதியில் குறிப்பிட்ட அகதிகளை அடித்து விரட்டியவர்களும், பொலிஸில் காட்டிக் கொடுத்தவர்களும் இந்த மொழி பெயர்ப்பாளர்களுக்குள் அடங்குவர். இந்நபர்கள் நோர்வேயின் வடபகுதியான பின்மார்க், துரொம்ஸ், நூர்லாண்ட் மாகாணங்களில் மொழி பெயர்ப்பாளர்களாகவும், அகதிகள் புனர்வாழ்வு அதிகாரிகளாகவும் பதவி வகித்தனர். தமிழ் அதிகாரிகளின் அட்டகாச அடாவடித்தனங்களை வட நோர்வேயில் இருந்து ஆரம்பிக்கின்றேன்.

வடநோர்வேயைப் பொறுத்தளவில் தமிழ் அகதிகள் 1988 இலேயே பெருமளவில் குடிபுகுந்தனர். இவ் அகதிகள் அனைவரும் தமது நகர சபைக்கு குடிவந்து சில நாட்களிலேயே வடநோர்வேயில் மீன்பதனிடும் தொழிற்சாலைகளில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். நோர்வேயின் கீழ்பகுதியில் அகதிகள் வேலைக்கு திண்டாட வடக்கில் உடனடியாகவே வேலை வாய்ப்பு பெற்றுக் கொண்டனர்.

நோர்வே அகதிகள் குடியமர்த்து, புனர்வாழ்வுச் சட்டப்படி ஒவ்வோரு அகதிக்கும் ஆரம்பப் வதிவிடப் பொருளாதார உதவியாக குறைந்தபட்சம் 25000 குரோணர் (1988) புனர்வாழ்வு அலுவலகத்தால் பெற்றுக் கொள்ள உரிமையுண்டு. இவ்வுதவியானது பலருக்கு அரைவாசியும், சிலருக்க முற்றுமுழுதாகவும் (குடும்பம்) பெற்றுக்கொண்டனர். இவ்வுதவி சிலருக்கு முற்றுமுழுதாக மறுக்கப்பட்டது. உதவி மறுப்பும், அரை அளவு உதவிவழங்குதலும் நோர்வே சமூகநலசட்டத்திற்கு முரணானதாகும். இவ்வுதவி மறுப்பு நடவடிக்கையானது தமிழ் மொழி பெயர்ப்பாளர்களாலும், புனர்வாழ்வு அதிகாரிகளாக பணிபுரிந்த தமிழர்களால், நோர்வேஜிய சமூகநல சேவகர்களுடன் இணைந்தே நடத்தப்பட்டது. தமக்கு உதவி வழங்குவதில் நடந்த அநீதி பற்றி அகதிகள் இந்த தமிழ் அதிகாரிகளுடன் மொழி பெயர்ப்பாளர்களுடனும் தொடர்பு கொண்டு கெட்டபோது "வேலை செய்பவர்களுக்கு உதவி இல்லை" என காரணம் கூறப்பட்டது. இக்காரணத்தை ஏற்றுக் கொள்ளாதவர்களுக்கு சட்டப்புத்தகத்தின் சமூகநல உதவி பற்றிய சில சட்டவரிகள் வாசித்துக்காட்டப்பட்டதுடன் மொழிபெயர்ப்பாளர்கள் "தமிழன் என்ற முறையில் செல்லுறன் தேவையில்லாமல் பிரச்சனைப் படாதையுங்கோடாப்பா ........" என சமாளிப்பும் செய்து தமிழ் அகதிகளை ஏமாற்றி இவ் நோர்வேஜிய அதிகாரிகளின் கைக்கூலியாகினர். இச் செயற்பாட்டால் நகர சபைகள் பல்லாயிரம் குரோணர்களை லாபம் அடைந்தது.

எம் தமிழ் சமுதாயமானது பல போலிக் கெளரவங்களையும், தற்பெருமைகளையும் பாராட்டுவதில் தனித்துவமானது. தன் போலிக் கெளரவத்தை இழப்பதென்பது உயிரை விடுவதற்கு சமமானது எனவும் பெருமை பாராட்டுவதில் பெரும் புகழ்பெற்றது. தமிழ் அகதிகள் பலர் மத்தியில் சமூகநல உதவி பெறுவதென்பது அவமானத்திற்கு உரியதொன்றாக கருதப்பட்டது. (ஏன் இப்போது சமூக நல உதவி பெறுபவர்களை பலர் பிச்சைக்காசு வாங்குபவர்கள் என்றே கணிக்கப்படுகின்றனர்.) இம் மனநிலையானது, மொழிபெயர்ப்பாளர்களாலும், புனர்வாழ்வு அதிகாரிகளான தமிழ் கைக்கூலிகளாலும் தம் மேல் அதிகாரிகளுக்கு கூறப்பட்டது. உதவி கேட்டு சமூக நல அலுவலகம் சென்ற சில தமிழர்களுக்கு "கெளரவம்" பற்றி விசாரிக்கப்பட்டவுடன் "தாம்

www.padippakam.com



# மிழ் கைக்கூலிகளும்

## சே அநேகமாக அகதியாக வந்து அனுபவித்திருப்பார்கள்

**A. Sithamparanathan**

உதவிக்கு வரவில்லை சும்மா என்ன நடக்குது என்று பாக்க வந்த நாங்கள்" என தமிழர்கள் தாமாகவே உதவிகேட்காமல் வீடு சென்று நண்பர்களிடம் வட்டிக்கு கடன்பட்டனர்.

துரம்சோவிற்கு அருகில் அமைந்ததோர் நகர சபையில் அகதியான ஒரு தமிழருக்கு புனர்வாழ்வு அலுவலகத்தால் கணணியும் (computer), மற்றும் சில கருவிகளும் அவர் பாவனைக்கு வழங்கப்பட்டது. சில வாரங்களின் பின் அக் கணணியும் கருவிகளும் அகதிகள் புனர்வாழ்வு அலுவலகத்தில் பணிபுரிந்த தமிழ் அலுவலகரால் ன்பதவி அதிகாரத்தைப் பாவித்து றிமுதல் செய்யப்பட்டது. அதுவுமல்லாமல் "தமிழ் அகதிக்கு ணணி தேவையற்ற விடையம் ன்றும் இப்படியான உதவிகளை ரு தமிழனுக்கு செய்தால் ற்றவர்களும் எதிர்பார்ப்பார்கள் தனால் நகர சபைக்கு தேவையற்ற செலவீனம் ஏற்படும்" எனவும் இந்தக் கைக்கூலியான தமிழ் அலுவலகரால் கரசபை புணர்வாழ்வு திகாரிகளுக்கு அறிக்கையும் ளக்கமும் சமர்ப்பிக்கப்பட்டது.

மற் கூறிய சம்பவங்கள் சில தாரணங்களே. வட நோர்வேயில் மிழ் மற்றும் அகதிகள் மீதான கைக் லிகளின் அடாவடித்தனங்கள் பற்றி டர்ந்தும் எழுதலாம் ஆனால் க்கட்டுரை நீண்டுவிடும். ஆகவே ார்வேயின் மேற்கு, கிழக்கு மற்றும் த்திய பகுதிகளின் மாழிபெயர்ப்பாளர்களின் ருகுதாளங்கள் பற்றி பொதுவாக பரிக்கிறேன்.

ார்வேயின் கீழ் பாகத்தை எடுத்துக் ாண்டால் 5 பெரிய நகரங்களை ர்னகத்தே கொண்டது. நோர்வேயில் கதியாக தஞ்சம் கோருபவர்கள் 5 ரங்களில் ஏதாவது ஒன்றின் ாலிஸாருடன் தொடர்பு ாண்டுதான் தஞ்சம் கோர ண்டும். தலைநகர் ஒஸ்லோ க்கு நோர்வேயையும், பேர்கன் மேற்கு நோர்வேயையும், தவங்கர் தென் மேற்கு ர்வேயையும், மத்திய நோர்வேயை ரண்யம், தென் நோர்வேயை ஸ்ரியான்சன்னும் பிரதிநிதித்துவப் த்துவதுடன் பொலிஸ் லயங்களையும் கொண்டுள்ளன. மேற்குறிப்பிட்ட ரங்களில் ஒஸ்லோ, பேர்கன், தெரண்ணயம் என்பன பெருமளவு தமிழர்களுக்கு புகலிடம் அளிக்கும் நகரங்களாகும். இப்பகுதிகளில் தமிழர்கள் எவரும் அகதிப் புனர்வாழ்வு நிலையங்களில் அலுவலகர்களாக பணிபுரிவில்லை. ஆனால் பொலிஸ் மற்றும் நகரசபைகளில் மொழிபெயர்ப்பாளர்களாக பணிபுரிகின்றனர். 1988 இல் 35 தமிழ்மொழி பெயர்ப்பாளர்கள் பணிபுரிந்தனர். இவர்களின் பெரும் பகுதியினர் நகர சபை புனர்வாழ்வு அலுவலகங்களிலும், பாடசாலை, வைத்தியசாலை, மோட்டார் வாகனச் சாரதியாக பயிற்றும் நிலையங்கள், தொழிற்சாலைகள், சமூகநல நிலையங்கள் (சொசியால் கந்தோர்) தாய்சேய் நல நிலையங்கள் போன்ற சமூக சேவை நிலையங்களில் மொழி பெயர்ப்பாளர்களாக பணிபுரிந்தனர். மீதமானோர் பொலீஸ் நிலையங்களிலும், நீதிமன்றங்களிலும் பணிபுரிந்தனர். (சிலர் இரண்டு இடத்திலும் வேலை பார்த்தனர்)

சொசியால் தொல்க்குகளின் அட்டகாசம்:–

சமூக நல நிலையங்களில் வேலை செய்த மொழிபெயற்பாளர்களை சொசியால் கந்தோர் தொல்க் (மொழிபெயற்பாளர்) எனவும் இரண்டாம் வகையினரை பொலித்தி தொல்க் எனவும் பரவலாக அழைக்கப்பட்டனர். முதலில் சொசியால் தொல்க்குகளின் அட்டகாசத் தனம் பற்றி சில கருத்துக்கள்.

இவர்கள் நான் கட்டுரையின் முன்பக்கத்தில் குறிப்பிட்ட வட நோர்வே தொல்க்குக்கு சமமானவர்கள். அவர்கள் செய்த அதேவேலையை இவர்களும் செய்தார்கள். அத்துடன் வடநோர்வே தொல்க்குகளை விட இவர்கள் மேலதிகமாக செய்த சுத்துமாத்து என்ன வெனில் லஞ்சம் வாங்கலாகும். நம் தமிழர்கள் பலர் இங்கு வந்து கார் ஓடப்பழகி சாரதிப்பத்திரம் பெற்று வருகின்றனர். சாரதிக்கான அனுமதிப்பத்திரம் பெறுவது என்பது நோர்வேயில் இலகுவான காரியம் அல்ல. குறைந்தது 10000 குரோணர்கள் சாரதிப் பயிற்சி நிலையங்களுக்கு செலுத்தி அங்கு கார் ஓடப்பழகுவதுடன், பாடப்பயிற்சி (theory) பயிற்சி வகுப்பும் செல்ல வேண்டும். இறுதியில் எழுத்து மூலமான பரீட்சையும், வாகனம் ஓட்டிக்காட்டுவதுடனான பரீட்சையிலும் சித்தி அடைந்தால் தான் அனுமதிப் பத்திரம் கிடைக்கும். நம் தமிழர்களைப் பொறுத்தளவில் வாகனம் ஓட்டுவதில் திறமையானவர்கள் ஆனால் எழுத்து மூலமான பரீட்சை என்பது மிகவும் கடினமானது. ஏனெனில் பரிட்சைக்கான வகுப்புகளும் அதற்கான புத்தகங்களும் நோர்வேஜிய மொழியில் மட்டுமே உள்ளன. எம்மவற்கு நோர்வேஜிய மொழியில் வாசிப்பதும் பரீட்சை எழுதுவதென்பதுவும் சிதம்பர சக்கரத்தை பேய் பார்த்த கதைதான். இந்த நிலையைத் தெரிந்து கொண்ட பயிற்சி நிலையங்கள் மொழி பெயற்பாளர்களை உதவிக்கு அழைத்தனர்.

மொழிபெயற்பாளர்களை உதவிக்கு அழைக்கும் போது சாரதிப் பயிற்சி நிலையங்கள் பரீட்சை நாளிற்கு குறைந்தது 24 மணி நேரத்திற்கு முன்பே பரீட்சையில் கேட்கப்படும் கேள்விகள் பற்றிய விபரங்களை மொழி பெயர்ப்பாளருக்கு தெரிவிப்பார்கள். ஏனெனில் மொழிபெயற்பாளர்கள் சில தொழில் நுட்ப சொற்தொடர்களையும், சொற்களையும் தயார்படுத்திக் கொள்வதற்காக. இவ் வசதிகளை சாதகமாகப் பயன்படுத்தி தமிழர்களான சாரதி மாணவர்களிடம் பரீட்சையில் சித்தி அடைவதற்கு உதவி செய்ய லஞ்சம் கேட்டார்கள் மொழிபெயற்பாளர்கள். நோர்வேயின் மேற்குப் பகுதியில் அமைந்த நகர் ஒன்றில் மொழி பெயற்பாளர் 3000 குரோணர்கள் ஒவ்வோரு மாணவரிடமும் லஞ்சமாகப் பெற்றார். வட நோர்வெயில் மொழிபெயற்பாளர் ஒருவர் எந்த எந்த "சேவை" எவ்வளவு "விலை" (லஞ்சம்) என்ற விலைப்பட்டியல் வைத்திருந்து செயற்பட்டார். இவ்லஞ்ச முறை இன்றும் நடைமுறையில் இருந்து வருகிறது. தற்போது சாரதி அனுமதிப் பத்திரம் பெற பரீட்சைக்குப் போகும் தமிழர்கள் மொழி பெயற்பாளரை தொலைபேசியிலோ அல்லது நேரடியாகவோ தொடர்பு கொண்டு "விலை" பேசுவது சாதரணமான விடையமாகும். இதற்கிடையில் சில தமிழர்கள் ஒரு சில மொழி பெயற்பாளர்களிடம் "விலை" பேசப் போய் மொழிபெயற்பாளர் விரட்டியடித்த சம்பவங்களும் "புத்தி" சொல்லி அனுப்பிய சம்பவங்களும் நடந்துள்ளது. எதற்கும் விதிவிலக்கு உண்டு தானே.

பொலீஸ் தொல்க்குகள் அரசின் கைக் கூலிகள்

அடுத்து பொலீஸ் தொல்க்குகள் பற்றி. இவர்களே பெரிய தொகை லஞ்சமாகப் பெறுகின்றார்கள். ஒருவர் புதிதாக அகதியாக வந்து விட்டால் அவ் நபரின் உறவினரோ, நண்பர்களோ அல்லது ஏஜன்சியோ "தொல்குடன்" தொடர்பு கொண்டு, உதவி செய்யுமாறும் பொலீஸ் விசாரைணையில் அகதியாக வந்தவர் பிழையான தகவல்களைச் சொன்னால் மொழி பெயற்கும் போதுதிருத்தி சொல்லுமாறும், வேண்டுகோள் விடுப்பது வழமை. இச் சந்தர்ப்பத்தில் கட்டாயம் அகதியாக வந்தவருக்கு பொலீஸ் விசாரணையில் உதவி செய்ய வேண்டியது <u>சட்டப்படி முரணானாலும் நியாயம், தர்மம், மனித நேச அடிப்படையில் தவறல்ல.</u> ஆனால் அகதியாக வந்தவரின் சூழ்நிலையைப் பாவித்து பணம் கறப்பதுதான் தவறு. இந்தப் பொலீஸ் தொல்க்குகள் இன்று பல்லாயிரம் குரோணர்கள் வரை லஞ்சம் வேண்டுகிறார்கள். சட்டங்களும் அவற்றின் ஓட்டைகளும், எப்படி வாக்கு மூலம் கொடுத்தால் அகதி அந்தஸ்து கிடைக்கும் என்ற நுணுக்கங்களையும் ஏஜன்சிகளுக்கு விற்பதன் மூலம், மற்றும் இம் மொழி பெயற்பாளர்களுக்கு மேற் கூறிய அறிவு உண்டு என நம்பி உதவி கேட்கும் அப்பாவி அகதிகளிடம் பணம் கறப்பதன் மூலமும் கொளுத்து வருகின்றார்கள் இக் கைக்கூலிகள். இதுமாத்திரமன்று தற்பொழுது பல தமிழர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப் படுவோமோ என பயந்திருக்கும் நிலையையும் தமக்கு சாதகமாகப் பயன் படுத்துகின்றனர்.

பொலிசாருடனும் அகதிகள் திணைக்களத்துடனும் (UDI) அன்னியோன்னியமாக உறவு வைத்திருக்கும் இவர்கள் 30000 குரோணர் லஞ்சம் தந்தால் அகதி அந்தஸ்து பெற்றுத் தருவதாக இடைத் தரகர்களால் சம்மந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டு விலை பேசுகிறார்கள். ஒஸ்லோ பகுதியில் இது பரவலாக எல்லோருக்கும் தெரிந்த விடையம். எனக்குத் தெரிந்தவரை எவருக்கும் இவர்கள் அகதி அந்தஸ்து பெற்றுக் கொடுக்கவில்லை. ஆனால் விலை பெசி பணம் கொடுத்த சம்பவங்களை நான் நேரடியாகக் கண்டிருக்கின்றேன். இக்கட்டுரையை எழுதத் தூண்டியதும் இந்த நிகழ்வுதான். அகதிகளின் இரத்தத்தை ஏஜன்சிகள் உறுஞ்சியது போதாதென்று தாமும் உறுஞ்ச நினைக்கும் இந்த இரத்தவுறுஞ்சி அட்டைகளை ஒட்டு மொத்தமாக அம்பலப்படுத்தவே இந்த நீண்ட விபரமான கட்டுரையை எழுதினேன்.

இந்த கைக்கூலிகளின் அடாவடித் தனத்தால் பலமுறை (1988 ஆம் ஆண்டிலிருந்து) பாதிக்கப்பட்டவன் என்ற முறையில் நான் உங்களுடன் என் அனுபவத்தை பகிந்து கொண்டுள்ளேன். இந்தக் கட்டுரையை எழுத முன் இப்படியான கட்டுரையை பிரசுரிப்பீர்களா என சுமைகள் ஆசிரியர் குழுவிடம் தொடர்பு கொண்டு கேட்டேன். இக்கட்டுரை மக்கள் நலனின் அடிப்படையில் எழுதப்பட்டிருப்பின் கருத்துச் சுதந்திரத்தை மதித்து பிரசுரிக்க முயல்வதாகக் கூறினர். இதனைப் பிரசுரிக்கும் பட்சத்தில் சுமைகள் ஆசிரியர் குழுவிற்கு எனது நன்றிகள்.

*இறுதியாக சிறு குறிப்பு:– இக்கட்டுரையில் என் அனுபவத்தையே எழுதினேன். இக்கட்டுரையின் நோக்கம் எல்லா தமிழ் மொழி பெயற்பாளர்களையும் கெட்டவர்கள் என முத்திரை குத்துவதல்ல. எல்லாவற்றிற்கும் விதிவிலக்கு உண்டுதானே?*

நோர்வே அரசும் தமிழ் கைக்கூலிகளும் எனும் கட்டுரையில் தனது அனுபவத்தை மக்கள் எல்லோருடனும் பகிர்ந்து கொள்வதற்காக சுமைகளை ஆக்கதாரர் கேட்ட போது மக்கள் நலனில் இருந்து ஆக்கம் எழுதப்படுமானால் எக்கருத்துக்கும் மதிப்பளிக்கப்படும் என்ற வகையில் பிரசுரிப்பதாக கூறியது. அதன் அடிப்படையில் இவ்வாக்கமும் அமைந்திருக்கிறது. இருப்பினும் இவ்வாக்கத்தில் கூறப்படும் அனைத்து விடையங்களுக்கும் இவ் ஆக்ககாரரே பெறுப்பாகின்றார் என்பதையும் தெழிவாககூறிக் கொள்கிறது சுமைகள்.

–சுமைகள்–

www.padippakam.com



# சுமங்கலி

## குடும்ப காரரிட்ட தனியா இருக்கிற பொடியள் ஏன் வாறாங்கள்....... ஆனமான சோறுகறி சாப்பிடத்தானே............"

சி. தனலட்சுமி

வெளியில் சினோ விழுந்து கொண்டிருந்தது. தாறுமாறாக தூசிகள் காற்றில் பறக்கிறமாதிரி ஒழுங்கில்லாமல் வந்து கொண்டிருந்தது. இன்னும் கொஞ்ச நேரத்தில் வெள்ளைநிறமாகி வெளிச்சமாகிவிடும். கல்யாணி குசினிக்குள் வந்து அடுப்பில் தண்ணீரை கொதிக்க வைத்து விட்டு பாத்துறூமுக்குள் சென்றாள். ஆளுயரக் கண்ணாடியில் இரவுடையில் அவள் அழகாக இருந்தாள். நீண்ட சுருள் கலந்த அடர்ந்த மயிர்க் கற்றைகள் நெற்றியில் உச்சி எடுத்து விரிந்திருந்தன. அளந்தே வைத்தது போல அழகான மூக்கு, சிவந்தநிறம், நேற்று வைத்த குங்குமம் வியர்வையில் ஊறி இருந்தது.

"நான் வடிவாத்தான் இருக்கிறன்" என்று நினைத்தபடி பல்லை தீட்டத்தொடங்கிய அவளது பார்வை கழுத்திலும் முகத்திலும் ஓடியது. "சுண்டினால் சிவக்கிற கலரில நீர் இருந்தபடியால் தான் ஒண்டும் வாங்காமல் உம்மைச் செய்தது" என்ற பாஸ்கரனின் வார்த்தைகள் ஞபகத்தில் வந்தன. ஒரு மெல்லிய வேதனை. பல்லைத்தீட்டி முடித்து முகம் கழுவிக் கொண்டாள். தண்ணீர் கொதித்திருந்தது. கோப்பியை பிளாஸ்கிலும், தனக்குமாக ஊத்தி வைத்துவிட்டு நேற்றைய பாத்திரங்களைக் கழுவ தொடங்கினாள்.

என்ன காலைச்சாப்பாடு....... பாண் இருக்கு, நேற்று வைச்ச கறியொண்டும் மிஞ்சயில்ல........ முட்டை பொரிச்சா சாப்பிடுவார். மத்தியானத்திற்கு கோழிக்கறி என்றவுடன் ஞாபகமாக கோழியை எடுத்து வெளியில் வைத்துவிட்டு எஞ்சிய பாத்திரங்களைக் கழுவ, மனம் விட்ட இடத்தில் இருந்து தொடர்ந்தது...... கோழிக்கறி, கரட் சம்பல், பருப்புக்கறி வைக்கலாம். ஆனா இவருக்கு உள்ளி போட்டா பிடிக்காது. கதைக்கைக்க மணக்கும் எண்டுவார், கத்தரிக்காயை பால்கறி வைச்சு, ஈரல் பொரிக்கலாம் எல்லாம் பிடிக்கும் எண்டு தான் நினைக்கிறன். கத்தரிக்காய் கறிதான் பிடிக்காது. கத்தரிக்காய் மட்டுமில்லை அவருக்கு ஒரு மரக்கறியும் பிடிக்காது. மீன் எண்டா குழம்பு, பொரியல், சொதி, வறை இதையெல்லாம் விட வேற ஏதாவது இருந்தாலும் செய்யச் சொல்வார். நல்ல காலம் வேற இல்லாமல் போச்சு. கழுவிய பாத்திரங்களை துடைத்து அலுமாரியில் அந்தந்த இடத்தில் அடுக்கி வைத்தாள்.

முதல் தண்ணியைக் கொதிக்க வைப்போம் இண்டைக்கு செவ்வாய்கிழமை ஆரும் வருவினமோ தெரியாது. எதுக்கும் அரிசி கூடப் போடுவோம். மிஞ்சினாலும் பறவாயில்லை பத்தாம வந்தா இவர் பேசுவார்.......... "என்ன குடும்ப பொம்புள, குடும்ப காரரிட்ட தனியா இருக்கிற பொடியள் ஏன் வாறாங்கள்...... ஆனமான சோறுகறி சாப்பிடத்தானே............" எண்டுசொல்லுவார். கல்யாணி தண்ணீரை அளந்து பாத்திரத்தில் விட்டு பாத்திரத்தின் அடிப்பகுதியை துடைத்துவிட்டு, அடுப்பில் வைத்து அடுப்பைப் போட்டுவிட்டு முட்டை பொரிப்பதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டாள்.

ரெலிபோன் அடித்தது. கல்யானி அவசரமாக ரெலிபோனை எடுத்தாள். அடுத்த முனையில் நோர்வேஜியக் குரல், யா, யா என்றபடி பாஸ்கரனை எழுப்பி ரெலிபோனைக் கொடுத்து விட்டு வந்தாள். கல்யானி நோர்வேக்கு வந்து ஒன்றரை வருடம் ஆகியிருந்தாலும் சில சொற்களைக் கதைக்கக் கூடியதாக இருந்ததே தவிர முழுமையாக வசனங்களில் பேச அவளுக்கு வராது. பாஸ்கரன் நித்திரைத் தூக்கத்துடன் பாத்துறூமை நோக்கி நடப்பது குசினிக் கதவுகளினூடாகத் தெரிந்தது. கல்யாணி முட்டை பொரிக்கும் வேலையைத் துரிதப்படுத்தினாள்..

கோலில் இருந்து.............. "கோப்பி போட்டனீரே" .......... .

"ஓம், ஓம் கொண்டு வாறன்".... கல்யாணி கோப்பிக் கப்புடன் வந்தாள்.

"முட்டை பொரிச்சிட்டன் சாப்பாடு எடுக்கட்டே"....

"ம்"— அவன் கவனம் ரெக்ஸ் ரீவியில் இருந்தது.

மேசையில் சாப்பாடு ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தது. அடுப்பில் கத்தரிக்காய் கறி கொதித்துக் கொண்டிருந்தது. கரட்டை விறாண்டிவிட்டு, கோழியை வெட்டத் தொடங்கிய போது பாஸ்கரன் உடையணிந்து வெளியில் புறப்பட ஆயத்தமாய் இருந்தான்.

"ஏதேனும் வாங்கிறதே"......

அவசர அவசரமாக பிறிஜைத் திறந்து "பச்சை மிளகாய், பாலும் முடிஞ்சுது, சீனியும் வாங்க வேணும்"....... . கதவு சாத்தும் சத்தம் கேட்டது. கோழியை வெட்டி கறியைக் கூட்டி வைத்துவிட்டு ஈரல் வெட்டத் தொடங்க ரெலிபோன் அடித்தது.

"ஹலோ, நான் ரவி கதைக்கிறன், அவர் நிற்கிறாரோ"

"இல்லை இப்பதான் இறங்கினவர். ஏதேனும் செல்லிறதே"

"இல்லை நான் எடுத்தது என்று செல்வுங்கோ"

"ஓம்" தொடர்பு துண்டித்தது.

பாஸ்கரன் பின்னேரம் மூன்று மணிக்கு வேலைக்குப் போனால் இரவு இரண்டு மணிக்குத்தான் வீடு திரும்புவான். அவன் வீட்டில் தங்கி இருக்கும் நேரம் மிகக் குறைவு. அந்த குறைந்த நேரத்திலும் பத்துக்குக் குறையாமல் ரெலிபோன் அழைப்பு வரும். ஞாயிறு மட்டும் லீவு. மற்றும்படி பாஸ்கரனை பிற்சாக் கடையில் சந்திக்கலாம்.

சமையலை முடித்து, குசினியை ஒழுங்கு படுத்திவிட்டு சாப்பாட்டு மேசையை ஒதுக்கி யன்னலைத் திறக்கவும், கதவு திறக்கும் சத்தமும் பலர் கதைக்கும் சத்தமும் கேட்டது. கல்யாணி அவசர அவசரமாக பாத்துரூமுக்குள் புகுந்து முகம் கழுவி அறைக்குள் சென்று உடையை மாற்றினாள். இந்த உடுப்பு அவருக்குப் பிடிக்குமோ தெரியாது. முந்தி எப்பவாவது போட்டு பேச்சு வாங்கின ஞாபகம் இல்லை என்று தனக்குத் தானே ஊர்ஜிதப் படுத்திக் கொண்டிருந்த போது பாஸ்கரன் உள்ளே வந்தான். பார்வை தலையில் இருந்து கால்வரை ஓடியது, திருப்தி மாதிரி முகம் தெரிந்தது. கல்யாணிக்கு நின்மதியாய் இருந்தது.

"சாப்பாட்டை எடுமன் நான் வேலைக்குப் போக வேணும்"...... . கல்யாணி சாப்பாடுகளையும் பீங்கான்களையும் கொண்டுவந்து ஒழுங்காக வைத்தாள். ஹோலில் சுகனும், பார்த்தீபனும், ஒட்டகத்தைக் கட்டிக்கோ, கொட்டியாக ஒட்டிக்கோ வட்டவட்டப் பொட்டுக்காறி ........ பாட்டு ரீவியில் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சாப்பாடு முடிந்ததும் கல்யாணி பாத்திரங்களை திரும்பி குசினிக்குள் எடுத்துச் சென்றாள். பாஸ்கரன் புறப்பட ஆயத்தமானான். சுகனும், பார்த்தீபனும் கூடவே வெளிக்கிட்டனர். "யன்னலை இறுக்கிபூட்டும், அடுப்பை நிப்பாட்டினீரோ பாரும் என்ன ......" "ஓம்" கல்யாணி பதில் சொன்னாள். நேரம் மூன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு புத்தகப்பையை தூக்கிக் கொண்டு, பாஸ்கரன் சென்னபடி யன்னல் கதவைப் பார்த்துப் பூட்டி, அடுப்பை ஒன்றுக்கு இரண்டு தடவை கவனமாகப் பார்த்துவிட்டு கையுறையையும், யக்கற்றையும் போட்டுக் கொண்டு சப்பாத்தைக் கொழுவிக் கொண்டு பஸ் ஸ்ரேசனை நோக்கி நடந்தாள். ரெட்குரஸ் கட்டிட வாசலில் ஆபிரிக்க நாட்டவர் புகைத்தபடி "கர்புரி" என்று கதைத்துக் கொண்டு நின்றனர். அவர்களை விலத்திய கல்யாணி இரண்டாவது மாடியில் தனது வகுப்பறைக்கு வந்தாள், நல்லகாலம் இன்னும் ரீச்சர் வரவில்லை. ...... "நின்மதி"........ புத்தகப்பையைத் திறந்து புத்தகத்தை எடுத்து பார்த்த போது "என்ன எல்லாக் கேள்விகளுக்கும் விடை எழுதிவிட்டீங்கள் போல" என்ற படி நிருபா பாக்கத்தில் அமர்ந்தாள்.

"எங்க படிக்க நேரம் இருக்கு"......

"கல்யாணி படிக்கிறதை இப்படிச்சுப் போடும் பிறகு கஸ்டம்"...... அனுபவ சாலியான நிருபா அறிவுரை சொன்னாள். நிருபா ஒஸ்லோவிற்கு வந்து 3 வருடங்கள் ஆகிவிட்டன. அவளும் கல்யாணியைப் போல கல்யாணம் செய்வதற்கு வருவிக்கப்பட்டவளே. வந்து ஆறு மாதத்தில் தொடங்கிய மொழிப்பயிற்சி அன்னும் 500 மணித்தியாலங்களைத் தாண்டவில்லை.

Hei,Hei Allesammen என்றபடி அன்னா உள்ளே வந்து கொண்டிருந்தாள். பாடம் ஆரம்பித்தது. கடையில் பொருட்களைக் கேட்கும் முறைகளை விபரித்துக் கொண்டிருந்தாள் அன்னா. கல்யாணிக்கு திடீர் என ஞாபகம் வந்தது, அபியின்ர பேத்தேக்கு வடை செய்து தரச் சொல்லி சொன்னவ. இவரிட்ட உழுந்துக்கு சொல்லி விட மறந்து போனன், அப்போ கூடவே பாஸ்கரன் வாங்கி வந்த பாலை பிறிஜிற்குள் வைக்காமல் விட்டுவிட்டு வந்தது நினைவிற்கு வந்தது. பால் பழுதாப் போகப்போகுது. என்று அலுத்துக் கொள்ளவும் இடைவேளைக்கு நேரம் வந்தது.

"என்ன கனவு காணுறீங்களோ"......

"அபியின்ர பேத்தேக்கு வடை செய்து தரச் செல்லிக் கேட்டவை. உழுந்து வாங்கெல்ல அதுதான் யோசிக்கிறன்........."

"முருகேசு அண்ணரின்ரை மகளுக்கு ஏரபிளேன் கேக் நீங்களே செய்து குடுத்தனீங்கள்". வீடியோவில் நல்வவடிவாக இருந்தது......" என நிருபா சம்பாசனையை தொடர, அது முடியாமலே பாடத்தை தொடங்கினாள் அன்னா. கடைசியில் பொருட்களை வாங்கி நன்றி சொல்லி வகுப்பு முடிந்தது. கல்யாணி புத்தகங்களை அடுக்கிக் கொண்டு பஸ் எடுக்க நிருபாவுடன் வேகமாக நடந்தாள். கதவைத் திறந்த போது ரெலிபோன் அடித்துக் கொண்டிருந்தது. ஹலோ சொல்ல அது நிண்டு போயிற்று. கல்யாணி முதல் வேலையாக பால் பெட்டிகளை பிறிஜிற்குள் வைத்துவிட்டு பாத்திரங்களைக் கழுவத் தொடங்க மீண்டும் ரெலிபோன் ஒலித்தது.

"ஹலோ" "என்ன நடக்குது........"

"குசினி ஒதுங்க வைக்கிறன்........"

"இரவு என்ன சாப்பாடு....... இடியப்பம் அவிச்சாச்சா, பிறிஜஷல மீன் இருக்கல்லோ ...... வேற என்ன" தொலைபேசி வைப்பது கேட்டது. கல்யாணி மாக்குழைப்பதற்கு தண்ணியை அடுப்பில் வைத்துவிட்டு பிறிஜில் இருந்த மீனை எடுத்து வைத்து விட்டு குசினியை ஒழுங்கு படுத்தத் தொடங்கினாள். வீட்டிலை அம்மா தேங்காய் திருவித்தா எண்டா அக்காவை சாட்டி, ரியூசனைச் சாட்டி, பள்ளிக் கூடத்தை, சோதனையை சாட்டிப் போட்டு பக்கத்து வீட்டில, கெந்தித் தொட்டுபாயிற நான், இஞ்ச இப்படி இருக்கிறன். கதைக்கிறதுக்கும் ஒருத்தரும் இல்லை அக்கம் பக்கத்தில. இஞ்ச வந்து எவ்வளவு கெட்டிக்காறியா வேலை செய்யிறன். எத்தனை பெத்தே பாட்டிக்கு கேக், வடை, கட்லட், ரோல்ஸ் செய்திருப்பன். சிந்தனையை அடுப்பு குழப்பியது. மாவை குழைத்து இடியப்பத்தை பிழிந்து அடுப்பில் வைத்து மீன்குழம்பு, சொதியை வைத்தபடி மளமள வென்று வேலைகளை செய்தாள் எல்லாம் முடித்து குசினியை ஒழுங்கு படுத்திவிட்டு பிளாஸ்கில் எஞ்சியிருந்த கொப்பியை கப்பில் ஊத்தி எடுத்துக் கொண்டு சோபாவில் அமர்தாள் ரீவியில் புரியாத மொழியில் ஏதோ போய் கொண்டிருந்தது.

இவர் இன்
இரண்டு மணிக்கு வந்து சாப்பிட்
கொஞ்ச நேரம் இருந்து பிற
படுத்து ........ அபின்ர பேர்தே ........
ஊரிலை இப்படி எல்லாம் பேர்த்
கொண்டாடினதா ஞாபகம் இல்லை
இன்னும் கொஞ்ச நாளையில நானு
ஒரு பிள்ளை பெத்து பேர்த்
கொண்டாடினா ....... கல்யாண
வீடுகளுக்கு பொம்மை மாதி
வெளிக்கிட்டுப் போய் கதைக்கிற ஒ
வசனங்களை திருப்பித் திருப்பி
கதைத்து.........

"இப்ப இந்த சாறியே பஷன்.........."

"ரோஜாப் படம் பார்த்தனிங்களே......

"ஓம் ஓம் சுருக்கு பிளவுஸ் போ
சாறி உடுத்தி இருக்கினம்........"

"வீட்டில இருந்து கடித
வந்ததே.........."

இப்படி எத்தனை நாளைக்
கதைக்கப் போறம். இதத்தானா அம்
சொல்லுறவ சந்தோசமாக குடும்ப
வாழ வேணும் எண்டும், அந்த
காலத்தில பொம்பிள
பிள்ளைகளுகசந்தோசம் எண்
என்ன? சந்தோசமான குடும்
வாழ்க்கை எண்டா என்ன? சமை
சாப்பிட்டு படுத்து எழும்பி பேர்த்
கலியாண வீட்ட போய் இவ எ
மனுசி எண்டு காட்டி ......? இதல்
என்ன வாழ்கை.

படிப்பகம்

www.padippakam.com



# அன்பின் சின்னண்ணனுக்கு...!

அன்பின் சின்னண்ணனுக்கு தங்கை ரதி எழுதிக் கொள்வது

அம்மா எனது திருமணம் பற்றியும் அதற்கான செலவு பற்றியும் கேட்டெழுதியதற்கான பதில் கடிதம் கிடைத்தது. நீங்கள் படும் கஸ்டம் இங்குள்ளவர்களுக்குத் தெரிவதில்லை. ஏன் நீங்கள் கூறியது போல ஒரு சகோதரர்களும் எழுதுவதும்மில்லை. நீங்கள் இரத்தத்தை புளிந்து பணம் அனுப்புவீகள் அதை இங்குள்ளவர்கள் எப்படி எப்படி எல்லாம் செலவு செய்ய வேணுமோ அப்படி அப்படி எல்லாம் செலவு செய்வார்கள். ஏன் எனக்குத் தெரியும், எங்கட அயல் வீட்டு அக்கா ஏதோ விஷேசமாம் என்று தலைக்குக் கொண்டை போட, கொண்டை போடும் கலை பழகிய ஒரு பெண்மணியை வீட்டுக்கு அழைத்து கொண்டைபோட்டர். அதற்கு 2000 ரூபா செலவு என்று எனக்கு சிரித்துக் கொண்டு சொன்னர். ஆக 2000 ரூபாய் தானே என்ரை பெரியண்ணன் கனடாவில், சின்னண்ணன் நோர்வேயில் இது என்ன கொஞ்சக் காசு தானே என சாதரனமாக விளக்கம் தந்தார். இதைக் கேட்டவுடன் நீங்கள் எழுதிய கடிதம் தான் எனக்கு ஞாபகம் வந்தது. இவளுக்கு எங்க தெரியப்போகுது அவள் அண்ணன்மார் படும்பாடு எனக்கு மனம் திணறியது. நான் சொன்னேன் உன் அண்ணன்மார் எவ்வளவு கஸ்டப்பட்டு உழைக்கினம் என்று தெரியாமல் செலவு செய்கிறாய் என. அவள் சென்னாள் உன் அண்ணன் தான் கஸ்டப் படுகிறார் ஆக்கும் என் அண்ணன் அங்கு பெரிய வேலை செய்கிறார் என்றாள். இதைக் கெட்டவுடன் எனக்குள் நானே சிரித்துக் கொண்டேன்.

எவ்வளவுதான் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்தாலும் நுகர்பெருள் கலச்சாரமும் சீரழிந்த சிந்தனையும் எமது சமுதாயத்தை ஆட்டிப்டைத்துக் கொண்டிக்கிறது. வெளிநாட்டில் இருந்து இங்கு வரும் பல்லாயிரக்கணக்கான ரூபாய்கள் இந்த யுத்த காலத்தில் சமுதாய வளர்ச்சிக்கு பாவிக்கபடாமல் சீரழிவுக் கலாச்சாரத்தையும் மனிதத் தன்மையற்ற தமிழ் கலாச்சாரத்தின் ஒருபகுதியையும் கட்டிக் காப்பதற்கு பயன் படுகிறது. பிள்ளைகளிடம் இருந்து பணம் கறப்பதற்காக கொழும்பு செல்லும் தந்தையர்கள் 5 நட்சத்திர கோட்டல்களில் தங்கி ஆடம்பரச் செலவு செய்வதும், ஆயிரக் கணக்கில் குடும்பமாக உல்லாசப்ப பயணங்கள் மேற்கொள்வதும் இங்கு சர்வவாதாரண நிகழ்வுகளாகும். நீ உன் கடிதத்தில் குறிப்பிட்டது போல் மேலும் அண்ணா சீதணத்தைக் கட்டிக் காப்பதும், மனிதர்களுக்கு விலை பேசுவதும் இங்கு எல்லா வர்க்கமக்களாலும் செயற்படுத்தப்படும் காரியம் அல்ல. வெளிநாட்டு பணக் கொழுப்பால் தற்காலத்தில் நம் சமூகத்தில் வளர்ந்து வரும் மத்தியதர வர்க்கத்தினதும் அவற்கு மேற்பட்டவர்களினதும் சீரழிவு நடவடிக்கைகளாகவே இவற்றைப் பார்க்கிறேன். யுத்தத்திற்கு முன்பும் அன்றாட சோத்திற்கு அல்லல்பட்ட மக்கள் தொடர்ந்தும் அதே நிலையிவேயே இருந்து வருகிறார்கள். சீதணம் வாங்குவதும் கொடுப்பதும் யுத்த சூழ் நிலையில் சாதாரண மக்கள் மத்தியில் அருகி வரும் ஒன்றாக இருந்து வருகிறது. வெளிநாட்டுப் பணமானது எம் சமுதாயத்தில் கலாச்சாரச் சீரழிவுகளை மட்டும் ஏற்படுத்தவில்லை மக்கள் மத்தியில் நீண்டதோர் இடைவெளியையும் ஏற்படுத்தி வருகிறது.

மேலும் அண்ணா நீங்கள் கூறியது போல் விட்டுக் கொடுப்பும் புரிந்துணர்வும் அன்பும், பாசமும் உள்ளத்தால் இணைந்த உறவுதான் உறவு. இவ்வகையான உறவிற்கு தமிழ்சமுதாயம் பழக்கப்பட்டதல்ல. போலிக் கௌரவங்களையும் கட்டிக்காக்க முடியாத கற்புக்களையும் பெண்கள் மீது சுமத்துவதன் மூலம், சுதந்திரமான சுயமுடிவுடன் கூடிய உறவுகளை ஏற்படுத்துவதை தடுத்து வருகிறது தமிழ் மேல்தட்டுவர்க்க கலாச்சாரம். எது எப்படி இருப்பினும் சமூக மாற்றம் நடைபெறுகிறது. சிந்தனை வளர்ச்சி அடைந்த ஆரோக்கியமான சமுதாயம் எம் தேசத்திலும் உருவாகும் என்பது ஆறுதலைத் தருகிறது.

பதிலை எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்

தங்கை ரதி

# மே 1 உலகத் தொழிலாளர் தினம்

## உலகத் தொழிலாளர்களே, ஒடுக்கப்பட்ட மக்களே ஒன்று சேருங்கள்!

கத் தொழிலாளர் தினம் வருடம் றும் உலகமெங்கும் ண்டாடப்பட்டு வருகிறது. வலங்கள், கோசங்கள், டிகளுடன் சிறு குழுக்கள் நாளை அதன் ளடக்கத்திற்கேற்ப போராட்ட ாக அனுசரிக்க, நம்பான்மையான உழைத்து ழும் மக்களிடையே ழைப்பாழிகளின் தினம் ஒரு ரன விடுமுறை தினம் என்ற ந்தே நிலவுகிறது. இந்நிலை ஏன் நிலவுகிறது என்று விளக்குவதற்காக, பல ஆய்வுகளையும் அறிக்கைகளையும் அறிவாளிகளும் 'மார்க்சிச' பேராசான்களும் வெளியிட்ட வண்ணம் இருக்கிறார்கள். ஆனாலும் உண்மை என்னவெனில் முதலாளித்துவ சமூகக் கட்டுமானத்தின் உழைக்கும் மக்கள் மீதான சிந்தனை மழுங்கடிப்பு முயற்சியானது வெற்றியளித்ததே காரணமெனலாம். உதாரனமாக உரிமைகோட்டு ஊர்வலம் போகவே அல்லது போராட்டம் நடத்தவே தெருவில் இறங்குவதை விட வீட்டில் இருந்து தொலைக்காட்சி பார்ப்பதே மேல் என்று பதில் கூறும் மனிதர்களை சார்வசாதாரணமாக தற்கால சமூகத்தில் காணமுடிகிறது. முதலாளித்துவ நுகர்பொருள் சிந்தனையானது மக்கள் தொடர்பு சாதனங்கள் மூலம் பிரச்சாரப்படுத்தப்படுவதே காரணமாகும்.

மனிதனை மனிதனாக மதிக்காமல் தனது இரும்புப் பெட்டியை மட்டும் நிரப்பினால் போதும் என்று வாழும் முதலாளிகளின் கொடுமைகளை எதிர்த்து மனிதனை மனிதனாக வாழ விடு எனக் குரல் எழுப்பிய எமது மூதாதையர்கள் தமது இரத்தம் சிந்தி தமது கோரிக்கையில் வெற்றி கண்டனர் என்பதனை நினைவு கூறும் தினம் தான் மே முதலாம் திகதி. 1886 ஆண்டு அமெரிக்காவின் சிக்காகோ நகரம் உழைப்பழர்கள் இரத்தத்தால் சிவப்பாகிய காலத்தில், அமெரிக்கத்தொழிளாளர்கள் தமது வேலை நேரத்தை எட்டு மணித்தயாலங்கள் ஆக்கும் படிகோரியும், சிறுவர்களிடம் வேலை வாங்கவேண்டாம் எனக் கோரியதுடனும், மற்றும் பிற கோரிக்கைகளை முன்வைத்து அன்று தம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த அந்த முதலாளிகளுடன் போராட்டம் நடத்தி வெற்றி பெற்றனர். அமெரிக்கா உழைப்பாழிகளின் குறைகளைக் கண்டறிந்து அதை தன்னால்

8ம் பக்கம் பாற்க.......

www.padippakam.com



**AVSENDER / FROM:**

**Sumaihal**
**postboks: 415**
**9001 TROMSØ**
**NORWAY**

# BLAD:

**MOTTAKER / TO:**

1 ம் பக்க தொடர்

பேர்கனில் வாழும் தமிழ்க்குடிமகளான எனக்கும் இன்னும் பலருக்கும் மேற்கண்ட தகவல் அதிர்ச்சியைத் தந்தது. ஏனெனில் வைத்தியருக்கு ஏற்கனவே சட்ட ரீதியாக மணம் செய்த தமிழ் மனைவியும் பிள்ளையும் (10 மாதக்குழந்தை) உண்டென்பது எம் எல்லோருக்கும் தெரியும். மேலும் வைத்தியர் நாடுகடத்தப்பட்ட போது கூடவே அவர் மனைவியும் குழந்தையும் நாடுகடத்தப்பட்டனர். மேற்கண்ட அதே பத்திரிகையின் (BT 23.3.95) இரண்டாம் பக்கத்தில் வைத்தியருடன் பேர்கன் ரீடன் நிருபர் கொழும்பில் சந்தித்து கண்ட பேட்டி பிரசுரிக்கப்பட்டிருந்தது. அப்பேட்டியில் தான் தனது நோர்வேஜிய காதலியையும் பிள்ளையையும் காணத்துடிப்பதாகவும், தனக்கு இலங்கைத் தமிழ் பெண்ணுடன் நடந்த திருமணமும், அப்பெண்ணும், தன்மீது சுமத்தப்பட்ட கலச்சாரச்சுமை எனவும் வைத்தியர் கூறுகிறார். வைத்தியர் 1991ஆம் ஆண்டு ரெலிமார்க் என்னும் வைத்தியசாலையில் வேலை செய்யும் போது "நோர்வேஜிய காதலியைச் சந்தித்ததாகவும், 1992 இல் இலங்கையில் உள்ள வைத்தியரின் தாய், தந்தையர்கள் தமிழ்ப்பெண் ஒன்றை திருமணத்திற்கு ஏற்பாடுசெய்து, வைத்தியருக்கு திருமணம் செய்து வைத்ததாகவும், அத்திருமணமானது வற்புறுத்தி செய்யப்பட்டதாகவும் பத்திரிகைப் பேட்டி கூறுகிறது. "திருமணமானது இலங்கை வழக்கப்படி ஒழுங்கு செய்யப்பட்டதாகும். எனக்கு அறிமுகமில்லாத ஒருத்தியை மனைவியாக என் தலையில் சுமத்தப்பட்டது ..........." என மேற்கண்டவாறு விளக்கம் கொடுக்கிறார் பத்திரிகைக்கு திரு வைத்தியர் அவர்கள்.

மேலும் மேற்படி பத்திரிகையான பெர்கன்டீடனின் 25.4.95 வெளியீடானது தனது முதற்பக்கத்தில், வைத்தியர் நோர்வேக்கு திரும்பிய செய்தியை வெளியிட்டது. பிரசுரிக்கப்பட்ட படத்தில் வைத்தியர் தனது காதலியுடனும் பிள்ளையுடனும் காட்சி அளிக்கிறார். பேட்டியில் வைத்தியர்அவர்கள் ——— பிள்ளை தன்போன்று இருப்பதாகவும், காது மட்டும் காதலியினதைப் போல் இருப்பதாகவும் கூறுகிறார். வைத்தியர் திரும்பி வந்தமையிட்டும் காதலியுடன் சேர்ந்தமையிட்டும் நானும் சந்தோசப்படுகின்றேன்.

ஆனால் இதை வாசிக்கும் உங்களிடமும் இங்கு வாழும் தமிழ் சமுதாயத்திடமும், வைத்தியர் நோர்வேக்கு வருவதற்கு வளிவகுத்த அமைப்புக்களிடமும், பத்திரிகைகளிடமும் சில கேள்விகளை (உங்கள் மனச்சாட்சியிடம்) கேட்கின்றேன். இந்த வைத்தியருடன் அவரின் தமிழ் மனைவியும், 10 மாதக் குழந்தையும் ஒரே நேரத்தில் ஒரே விமானத்தில் ஒன்றாகவே அனுப்பப்பட்டார்கள்.

1) அந்தப்பெண் திரும்பி வரவேண்டும் என யார் விரும்பினார்கள்? அந்தத் தமிழ் பெண்ணுக்காகவும், 10 மாதக் குழந்தைக்காகவும் யார் குரல் கொடுத்தார்கள்?

2) வைத்தியர் தன் மீது சுமத்தப்பட்ட சுமையாகவே தமிழ் பெண்ணைக் குறிப்பிட்டார். எனக்குத் தெரிந்தளவில் தமிழர் வரலாற்றில் இது தான் முதல் தடவையாக ஒரு ஆண் வற்புறுத்தி திருமணம் செய்யப்பட்டுள்ளார். சரி வற்புறுத்தி திருமணம் செய்யப்பட்டிருந்தால் அப்பெண் நோர்வே வந்தவுடன் அவளுக்கு நிலைமையை விளக்கி, தனது நோர்வேஜிய காதல் நாடகத்தைத் தெரிவித்து விவாகரத்து பெற்றுக் கொண்டிருக்கலாம் தானே?

3) ஏன் உடனடியாக விவாகரத்துப் பெற்றுவிட்டு தன் காதலியுடன் சீவிக்காமல் இரகசியமாக இரு பெண்களுடனும் உறவு கொண்டிருந்தார் இந்த வைத்தியர்? தமிழ் கலாச்சாரம் என வாய்கிழியக் கத்தும் நாம் இச்செயற்பாட்டை அனுமதிக்க முடியுமா?

4) தமிழ் மனைவியுடன் இங்கிருக்கும் போது, இல்லாத சுதந்திர உணர்வும் காதலியின் மீதான பாசமும், நாடுகடத்தப்பட்டவுடன் எங்கிருந்து வந்தது?

5) இலங்கைத் தமிழ் பெண்ணுடன் வைத்தியருக்கு 10 மாத குழந்தையுண்டு. தற்போது காதலியுடன் ஒரு குழந்தை கடந்த மாதம் பிறந்துள்ளது. இப்படியான இரட்டை வாழ்கை வாழ்ந்து இரு பெண்களையும் வஞ்சிக்கும் இச் செயற்பாட்டைக் கண்டிக்காது வைத்தியருக்காக குரல் கொடுத்த அமைப்புக்களிடமும் நோர்வேஜிய பத்திரிகைகளிடமும் ஒரு கேள்வி!!!

தமிழ் பெண்ணானவள் "பெண்" என்ற காரணத்தால் தானே நீங்கள் அவளுக்காக குரல் கொடுக்கவில்லை. தமிழ் பெண்ணென்றால் என்ன இழக்கமானவளா? கலியாணம் கட்டி குழந்தை பெறக் காரணமாக இருந்து விட்டு, நோர்வேஜிய பெண்ணே தனது காதலி எனக்கூறும் இவ்வைத்தியரின் செயற்பாட்டை ஏற்றுக் கொள்ள உங்களுக்கு எப்படி மனச்சாட்சி இடங்கொடுத்தது?

அன்பான மக்களே

ஒரு பெண்ணும் பத்து மாதக் குழந்தையும், நாடுகடத்தப்பட்டுள்ளனர். அவர்களுடன் நாடுகடத்தப்பட்ட ஆண் நோர்வேக்கு திரும்பி வந்து விட்டான். இந்நிலையில் அப்பெண்ணினதும் அவள் கைக்குழந்தையினதும் எதிர்காலம் என்ன? கொழும்பில் தவிக்கவிடப்பட்டுள்ள அவளுக்கு எதிர்காலம் என்ன?

ம. தேவகி அவர்களால் எழுதப்பட்ட இக்கட்டுரை ஒரு தமிழ் பெண்ணினதும், 10 மாதக் குழந்தையினதும் எதிர்கால வாழ்கைபற்றிய கேள்வியை மக்களாகிய உங்களிடம் கேட்கப்பட்டுள்ளது. இன்று பல தமிழர்கள் இங்கிருந்து திருப்பி அனுப்பப்பட்டபோதும் தாம் தொடர்ந்தும் இங்கு வாழ பல முறைகளில் இந்நாட்டு அரசுடன் போராடுகின்றனர். ஆனால் இவ்வாறு இரட்டை வேடம் பூண்டு தாயையும் குழந்தையையும் நடுத்தெருவில் தத்தழிக்கவிட்டுவிட்டு தான் உல்லாச வாழ்கையை வாழவிரும்பும் இவ்வைத்தியர் போன்று இன்னும் எத்தனை பே உள்ளனர். அவர்களிற்கு பாடம் கற்பிக்க மக்களாகிய உங்களா மட்டும் தான் முடியும்.

சுமைகள்

7 ம் பக்க தொடர்

முடிந்தளவு குறைப்பதற்காக போராடி வந்த ஒரு ஸ்தாபனமாகிய "தேசிய தொழிற் சங்கம்" தான் இப்போராட்டத்திற்கு அத்திவாரமிட்டது. இதன் பயனாக 1884 ஆண்டு எட்டுமணி நேர வேலைக்கான போராட்டம் துவக்கப்பட்டது. இப்போராட்டம் தான் 1886 இல் உச்ச நிலையை அடைந்தது. இக்காலகட்டத்தில் அமெரிக்க தொழிலாளர்கட்சிகளும், தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து நின்றது குறிப்பிடத்தக்கது. இதற்கு முன்பு பல்வேறு இடங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வேலைநிறுத்தங்கள், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றிருந்த போதும் 1885 இல் நடைபெற்ற தெழிலாளர் கூட்டமைப்பின் மாநாட்டுத் தீர்மானத்திற்கேற்ப 1886 மே முதல் திகதி அன்று பொது வேலை நிறுத்த அழைப்பை ஏற்று அமெரிக்காவின் அனைத்துத் தொழிலாளர்களும் வேலை நிறுத்தத்தில் கலந்து கொண்டனர். இவ்வாறு இரத்தத்தினால் உருவாக்கப்பட்ட மேதினம் இன்று அடைந்துள்ள நிலை மிகவும் வேதனைக்குரியது. "எவர்களுக்கு எதிராக இப்போராட்ட நாள் உருவாக்கப் பட்டதோ, இன்று அவர்கள் கையில் தான் மேதின விழாவின் நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கும் அதிகாரமும் உள்ளது. இதற்கு உதாரணமாக இவ்வருட மேதின ஊர்வலத்தின் போது குறிப்பிட்ட கோசங்களைத் தாங்கி செல்லக் கூடாது என முதலாழிகளின் கைக்கூலிகளாகச் செயற்பட்டு வரும் தொரம்ஸோ (நோர்வே) மேதினக் கமிட்டி முடிவெடுத்து தமக்கு எதிரான உழைக்கும் மக்கள் நலனில் அக்கறை கொண்ட பலரை ஊர்வலங்களில் பங்குபற்ற மறுப்புத் தெரிவித்தது. இதை கவனிப்போமாயின் இன்று மேதினத்தில் கூட தொழிலாளர்களின் உரிமை பறிக்கப்படும் நிலை உருவாகி உள்ளது. இந்நிலை மாற்றப்பட வேண்டுமாயின், தொழிலாளர் அமைப்புக்களும் தொழிலாளர் நலனில் அக்கறை கொண்ட கட்சிகளும், தற்போது முதலாளித்துவத்தின் கைக்கூலிகளாக செயற்பட்டு வரும் போலி தொழிற்கட்சிகளையும், போலித் தொழிற்சங்கங்களையும் தொழிலாளர் மத்தியில் அம்பலப்படுத்துவதுடன், சரியான தத்துவத்தின் அடிப்படையில் அணிதிரட்ட வேண்டும்.

தமிழ் தொழிலாளர்கள் பற்றி சில கருத்துக்கள்

தற்போது நோர்வேயில் வசிக்கும் அதிகமான தமிழர்கள் எதாவது ஒரு இடத்தில் வேலைபார்த்த வண்ணம் உள்ளனர். அவர்களில் ஒரு சிலரைத்தவிர மிகுதியானவர்கள் எந்தவெரு தொழிற்சங்கங்களிலும் அங்கத்தவர்களாக இணையவில்லை. இவ்வாறு இணையாமல் இருப்பதால், வேலைபார்க்கும் ஸ்தாபனத்தால் நியாயமற்ற முறையில் திடீர் என வேலையால் நிற்கும்படி உத்தரவு பிறப்பிக்கப்படின், தனியாக நின்று அதனை எதிர்த்துப் போரட முடியாது. ஆனால் தொழிற்சங்கம் ஒன்றில் இணைந்திருப்பின் இவ்வாறன நடவடிக்கைகளுக்கு எதிராக அவர்கள் உங்களுக்கு எல்லா வழியிலும் உதவிபுரிவர். இதற்கு உதாரணங்கள் பல உண்டு. அவற்றில் ஒன்று தான் தமிழர்களையும், மற்றும் பல வெளிநாட்டவர்களையும் வேலையால் நிறுத்தியதற்காக ஒஸ்லோ சாஸ் கோட்டலிற்கு எதிராக நடந்த போராட்டம். இதனால் நிறுத்தப்பட்ட தமிழர்கள் அனைவரும் வேலைக்கு மீள அழைக்கப்பட்டனர் எல்லோரும் அறிந்ததே. எனவே உழைத்து வாழும் நாம் எமக்கு எல்லாவிதத்திலும் உதவி புரியக் கூடியவற்றைத் தேர்ந்தெடுத்து இந்த முதலாளிகளுக்கு எதிராக மற்றைய உழைப்பாளத் தோழர்களுடன் இணைந்து செயற்படுவோம். எமது தலைவிதியை தீர்மானிக்கும் பொறுப்பை நாமே ஏற்போம்.

*உலகத் தொழிலாளர்களே ஒன்று சேருங்கள்*

## குர்டிஸ்தான் மக்கள்மீது துருக்கியின் பயங்கரவாதம்.

எல்லோருக்கும் 1991 ஆண்டில் சதாம்குசைனின் குவைத் ஆக்கிரமிப்பும், அமெரிக்க, மேற்குஐரோப்பிய ஏகாதிபத்தியங்களின் ஈராக்மக்கள் மீதான தாக்குதலும் நினைவிருக்கலாம். இதே காலகட்டத்தில் பல்லாயிரம் குர்டிஸ்தான் மக்கள் சதாம் குசைனால் கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டு பனியுறைந்த மலைப் பிரதேசங்களில் புழுக்களாக செத்து மடிந்தது மனிதாபிமானம் நிறைந்தவர்களுக்கு என்றும் நினைவிருக்கும். இன்று நான்கு வருடங்களின் பின்னும் அதேநிலை தொடர்கிறது. கடந்த மாத ஆரம்பத்தில் துருக்கிய பாசிச அரசு PKK கெரில்லாக்களை ஒழிப்பதாக கூறிக்கொண்டு குர்டிஸ்தானிய மக்கள் வாழும் பிரதேசங்களில் தனது படையை அனுப்பி ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களை கொன்றொளித்தது. இதில் பெண்கள், சிறுவர்கள், வயது முதிந்தோர் பெரும்பான்மையினர்.

போராட்டம் தொடர்கிறது

குர்டிஸ்தானிய மக்கள் அனுபவிக்கும் துன்பங்களும், இம்சைகளும் கொடுமைகளும் குறையவில்லை, அதிகரித்தவண்ணமே உள்ளது எல்லாவற்றிற்கும் இடையில் கடந்தமாதம் "புலம்பெயர்ந்த குர்டிஸ்தான பாராளுமன்றம்" நெதர்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சந்தோசமும் புதுத் தெம்பும் தரும் செய்தியாகும். நெதர்லாந்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள குர்டிஸ்தான் மக்களின் புலம்பெயர்ந்த பாராளுமன்றமானது போராட்டத்தை தொடர்ந்து நடத்த திட்டங்களை தீட்டுவதுடன் புனர்வாழ்வு நடவடிக்கைகள், சர்வதேச ஆதரவு திரட்டல், அரசியல் தீர்மானங்கள் கொண்டு வருதலும், நடைமுறைப் படுத்தலுமான பல விடையங்களை தலைமைதாங்கி செயற்படுத்தவுள்ளது. குர்டிஸ்தான் மக்க போராட்டத்தில் ஏற்பட்டுள்ள இப்புதிய திருப்பம் அவர்களின் விடுதலை போராட்டம் விரைவில் வெற்றியுடன் முடிவுற வழிவகுக்குமென நா நம்பவதுடன், வாழ்த்துக்களும் தெரிவிக்கின்றோம்.

படிப்பகம்